இனிமையான குழந்தைகளே! தனது (மனோ) நிலையை நன்றாக வைத்துக் கொள்ள வேண்டும் எனில், அதிகாலையில் எழுந்து ஏகாந்தத்தில் அமர்ந்து நான் ஆத்மா, நான் இப்பொழுது வீட்டிற்குத் திரும்பிச் செல்ல வேண்டும், இந்த நாடகம் முடிவடைந்துவிட்டது என்று சிந்தனை செய்யுங்கள்.

கேள்வி: முழுமையிலும் முழுமையாகப் பலி ஆவது என்பதன் அர்த்தம் என்ன?

பதில்: முழுமையாகப் பலியாகுவது என்றால் புத்தியின் தொடர்பு (யோகம்) ஒருவரிடம் இருக்க வேண்டும். குழந்தைகள் போன்ற எந்த தேகதாரியின் நினைவும் வரக்கூடாது. தேக உணர்வு அழிந்து போக வேண்டும். இவ்வாறு யார் பலி ஆகிறார்களோ, அவர்களுக்கு 21 பிறவிகளுக்கான ஆஸ்தி தந்தையிடமிருந்து கிடைக்கிறது. யார் ஒருவர் மற்றொருவருடைய பெயர் உருவத்தில் கவரப்பட்டு இருக்கிறார்களோ, அவர்கள் தந்தை மற்றும் தனது பெயரை அவப்பெயர் ஆக்குகிறார்கள்.

கேள்வி: தந்தை அனைத்து குழந்தைகள் மீதும் என்ன கருணை காண்பிக்கின்றார்?

பதில்: தந்தை, சோழியிலிருந்து வைரம் போல் ஆக்கக்கூடிய கருணை காண்பிக்கின்றார். எந்தக் குழந்தைகள் ஒவ்வொரு அடியிலும் அறிவுரைகள் கேட்கிறார்களோ, எதையும் மறைப்ப தில்லையோ, அவர்கள் மீது தானாகவே கருணை ஏற்பட்டு விடுகிறது.

பாடல்: யார் இந்த அனைத்து விளையாட்டையும் படைத்தது.....

ஓம்சாந்தி. யார் பாடலை எழுதினாரோ அவர் இதன் அர்த்தத்தை அறியவில்லை. பாருங்கள், உங்களைப் படைத்தபொழுது உங்களுக்கு எவ்வளவு நல்ல ஆஸ்தி கொடுத்திருந்தேன் என்று குழந்தைகளாகிய உங்களுக்கு தந்தை புரியவைத்திருக்கின்றார். சொர்க்கம் புதிய படைப்பு ஆகும். சொர்க்கம் எவ்வாறு படைக்கப்படுகிறது என்பதை உலகம் அறியவில்லை. பின்னர், எவ்வாறு மாயை என்ற 5 விகாரங்கள் ஆக்கிரமிக்கின்றன. ஒவ்வொரு விசயமும் புதியது, புது உலகிற்காக. சத்யுகம் என்று எதைச் சொல்லப்படுகிறது என்பதைக் கூட அறியவில்லை எனில் பிறகு, இதை எவ்வாறு அறிந்திருப்பார்கள்? இந்த ஞானம் எந்த சாஸ்திரத்திலும் இல்லை. சுயம் பரமபிதா பரமாத்மா தான் வந்து ஞானம் அளிக்கின்றார். அந்த ஞானம் பிறகு மறைந்து விடுகிறது. ஞானத்தின் மூலம் இராஜயோகத்தைக் கற்று இராஜ்யத்தை அடைந்தீர்கள், அவ்வளவுதான். இதை ஆன்மிக ஞானம் என்று கூறப்படுகிறது. ஆன்மிகம் என்று ஸ்பிரிட்டை, ஆத்மாவைக் கூறப்படுகிறது. தந்தையை பரம ஆத்மா (சுப்ரீம் ஸ்பிரிட்) என்று கூறலாம். அனேகப் பெயர்கள் வழங்கப்பட்டுள்ளன. ஆன்மிக ஞானம் வேண்டும் என்று கூறவும் செய்கின்றனர். தத்துவ சாஸ்திரம் என்பது சாஸ்திரங்களின் ஞானம் ஆகிவிடுகிறது. சாஸ்திரங் களை படித்து அறிந்து கொள்ளப்படுகிறது. பரமபிதா பரமாத்மாவோ சாஸ்திரங்களை படிப்பதே இல்லை. அவரை ஞானக்கடல் என்று கூறப்படுகிறது. அவர் அனைத்தும் அறிந்தவர் (அந்தர்யாமி) என்று மனிதர்கள் நிறைந்திருக் கின்றனர். ஆனால் அவ்வாறு கிடையாது. நாடகத்தின் அனுசாரம் யார் எத்தகைய கர்மம் செய்கிறார்களோ, அவர்களுக்கு அதற்கான பலன் கிடைத்தே ஆகவேண்டும். குழந்தைகளுக்கு கர்மம், அகர்மம், விகர்மத்தின் நிலை பற்றியும் புரிய வைக்கின்றார். கர்மம் எப்பொழுது அகர்மம்

ஆகிறது? பிறகு, கர்மம் எவ்வாறு விகர்மம் ஆகிறது? விகர்மம் ஏற்படும்படியாக சொர்க்கத்தில் எந்த கெட்ட செயலும் செய்யப்படுவதில்லை. ஏனெனில், அங்கே இராவண இராஜ்யமே இல்லை. ஆகையினால், கர்மம் அகர்மம் ஆகிவிடு கிறது. எப்பொழுது விகர்மம் செய்கின்றனரோ, அப்பொழுதே (ஆத்மாவில்) படிகிறது. பாவம் செய்விப்பது இராவணன். இப்பொழுது குழந்தை களாகிய உங்களுக்கு தந்தை புரிய வைக் கின்றார். சத்யுகத்தில் விகாரம் இல்லாமல் எவ்வாறு குழந்தைகள் பிறக் கின்றனர் என்பதை மனிதர்கள் அறியவில்லை. விகாரம் அவசியம் இருக்கும், ஆனால், இந்தளவிற்கு இருக்காது என்று அனேகர் கூறுகின்றனர். இங்கே கூட சந்நியாசிகள், குருக்கள், வருடத்தில் அல்லது மாதத்தில் ஒரு முறை விகாரத்தில் செல்லலாம் என்று கூறுகின்றனர். ஆனால் தந்தையோ குழந்தைகளே, காமம் மகா எதிரி ஆகும், அதன் மீது முழுமையான வெற்றி பெற வேண்டும் என்று உடனே கூறுகின்றார். சம்பூரண நிர்விகாரி ஆகவேண்டும். அங்கே இராவணனே இல்லாதபோது விகாரம் எங்கிருந்து வந்தது? சீக்கியர்கள் கூட ஆத்மா என்ற அழுக்குத் துணியை இறைவன் துவைக்கின்றார் எனப் பாடுகின்றனர். எனில், அனைத்து துணி களும் (ஆத்மாக்கள்) அழுக்காக உள்ளன. இவ்வாறு எவரையும் நிந்தனை செய்வதில்லை. யார் எவ்வாறு இருப்பார்களோ, அவர்களை அவசியம் அவ்வாறே கூறுவார்கள். திருடனை திருடன் என்று தான் சொல்வார்கள். கிரந்தத்தில் அதிகமான கருத்துக்கள் எழுதப்பட்டிருக்கின்றன. குருநானக் பரமபிதா பரமாத்மாவின் மகிமையைப் பாடியுள்ளார். இறைவனை நினைத்து சுகத்தைப் பெறுங்கள் என்று கூறுகின்றார். என்னை நினைவு செய்யுங்கள் என்று தந்தை கூறுகின்றார். யாரை அரைக்கல்பமாக நினைவு செய்தோமோ, அவர் ஒருவேளை கிடைத்து விட்டார் எனில், எவ்வளவு குஷி இருக்க வேண்டும். ஆனால், யார் அடிக்கடி தன்னை ஆத்மா என நினைக்கிறார்களோ, அவர்களுக்கே குஷி ஏற்படுகிறது. ஆத்மா எனப் புரிந்துகொள்வதன் மூலம் தந்தை மீது அன்பு இருக்கும். நமது தந்தை யார் என்பது இந்த சமயத்தில் ஆத்மா விற்குத் தெரியவே இல்லை. தந்தையினுடையவர் ஆகி விட்ட பின் தந்தையின் தொழிலை அறியவில்லை எனில், அவர்களை புத்தி அற்றவர்கள் என்றே கூறுவார்கள். பழி வாங்கு வதற்காக தூணிலிருந்து வெளிப்பட்டார் என்று பிரகலாதனின் கதை சொல்கின்றனர். ஆனால், பரமாத்மா இருப்பது எங்கே?... அட்ரஸ் (முகவரி) தெரியவே தெரியாது. இப்பொழுது குழந்தை களாகிய நீங்கள் அறிந்து இருக்கிறீர்கள். நீங்கள் பிரம்மாகுமாரர்கள், குமாரிகள் ஆவீர்கள். பிரஜாபிதா பிரம்மாவின் பெயர் புகழ்வாய்ந்தது ஆகும். குழந்தைகளுக்கு பிறப்பு கொடுப்பதற்கு அவருக்கு மனைவியே கிடையாது. எனவே, அவசியம் வாய்வழி வம்சத்தினராகவே இருப்பார் கள். நீங்கள் இதை புரிய வைத்திட இயலும். நாங்கள் பிரம்மா குமாரர், குமாரிகள், பிரஜாபிதா பிரம்மா என்ற பெயரை கேள்வியுற்று இருக்கிறீர்களா? பரமபிதா பரமாத்மா பிரம்மா மூலம் படைப்பு படைக்கின்றார். முதன் முதலில் பிரம்மாவைப் படைத்தார். பிறகு, பிரம்மா மூலம் படைப்பை படைத்தார். எனக்கு எத்தனை வாய்வழி வம்சத்தினர் உள்ளனர் பாருங்கள் என்று தந்தை புரிய வைக்கின்றார். அனைவருக்கும் சிவபாபாவிடமிருந்து தான் ஆஸ்தி கிடைக்கிறது. யாரை தத்தெடுக்கின்றனரோ, அவர்கள் அவசியம் ஏழைகளாக இருப்பார்கள். முதலில் பிரம்மாவை தத்தெடுத்தார். பிரம்மா மூலம் பிறகு வாய்வழி வம்சத்தினர் உருவானார்கள். அந்த விகாரத்தின் மூலம் பிறப்பெடுத்த பிராமணர்கள் உலகீய யாத்திரை செய்விக்கின்றனர், இந்த பிரம்மா வாய்வழி வம்சத்தினர் ஆன்மிக யாத்திரை

செய்விக்கின்றனர். இந்த ஆன்மிக யாத்திரையைப் பற்றி எவருக்கும் தெரியாது. நாம் நிர்வாணதாமத்திற்குச் செல்ல வேண்டும் என்று முயற்சி செய்கின்றனர். எனில், புத்தியின் யாத்திரை பிரம்மம் பக்கம் இருக்கும். அது பிரம்மத்தின் யாத்திரை ஆகிவிட்டது. நாம் பிரம்மத்தில் ஐக்கியமாகி விடுவோம் என்று நினைக்கின்றனர். எனில், உலகாய யாத்திரை செய்வதற்கான அவசியம் என்ன? யாத்திரையே நிர்வாணதாமம் செல்வதற்கானது தான். அதை, பிறகு, ஜோதி ஜோதியோடு கலந்து விட்டது அல்லது நீர்க்குமிழி, நீர்க்குமிழியோடு கலந்துவிட்டது என்று கூறமாட்டார்கள். ஆத்மா இந்த யாத்திரையை செய்கிறது. பிரம்ம தத்துவத்திற்குச் செல்கிறது. இது ஆன்மிக யாத்திரை ஆகும், மற்ற அனைத்தும் உலகீய யாத்திரை ஆகும். நிர்வாணதாமத்திற்கு யாரால் அழைத்துச் செல்ல இயலும் என்பது அவர்களுக்குத் தெரியவே தெரியாது. நான் தான் அனைவரையும் அழைத்துச் செல்கின்றேன் என்று இப்பொழுது எல்லையற்ற தந்தை கூறுகின்றார். தந்தை தான் அனைவருடைய வழிகாட்டியாக (கைடு) ஆகின்றார். சத்யுகத்தில் மிகவும் குறைவான மனிதர்களே இருப்பார்கள், மற்ற அனைத்து ஆத்மாக்களும் அவசியம் வீட்டிற்குத் திரும்பிச் செல்கின்றன. தந்தை தான் சத்தியமான விசயத்தைக் கூறுகின்றார். இப்பொழுது நீங்கள் உண்மையிலும் உண்மையான யாத்திரையில் இருக்கிறீர்கள். நான் ஆத்மா, நாடகம் முடிவடைகிறது, வீடு திரும்ப வேண்டும். இது உறுதியாக ஆகவேண்டும். ஏகாந்தத்தில் அமர்ந்து நான் ஆத்மா, பாபா நம்மை அழைத்துச் செல்ல வந்திருக்கின்றார், இந்தச் சட்டை சீ,சீ யானது என்று சிந்தனை செய்யுங்கள். இவ்வாறு தன்னுடன் தானே பேச வேண்டும், இதையே விசார் சாகர் மந்தன் என்று கூறப்படுகிறது. கர்மம் செய்வதற்குத் தந்தை அனுமதி அளித்துவிட்டார். மற்றபடி இரவு கண்விழித்து இந்தப் பயிற்சி செய்தீர்கள் என்றால், பகலில் கூட (மனோ) நிலை நன்றாக இருக்கும், உதவி கிடைக்கும். இரவு செய்யும் பயிற்சி பகலில் பயன்படும். இரவு 2 மணிக்குப் பின்பே கண்விழிக்க வேண்டும். ஏனெனில், 9 மணி முதல் 12 மணி வரையிலான சமயம் முற்றிலும் மோசமான (விகாரமான) சமயம் ஆகும். ஆகையால், அதிகாலையில் விசார் சாகர் மந்தன் செய்யப்படுகிறது. நான் ஆத்மா, இப்பொழுது பாபாவிடம் தான் செல்ல வேண்டும். ஒரு சட்டையை விட்டுவிட்டு மற்றொன்றை எடுப்பேன். இதுவே தன்னோடு தானே பேசுவதற் கான முறை ஆகும். 84 பிறவிகள் முடிவடைந்துவிட்டன. குறைவான நாட்களே மீதம் உள்ளன. இது எல்லையற்ற நாடகம் ஆகும். இத்தகைய விசயம் புத்தியில் இருப்பதன் மூலம் தேக உணர்வு உடைந்துவிடும். தந்தை மற்றும் ஆஸ்தி மட்டும் நினைவு இருக்கும்.

தந்தை தான் வந்து அறிவுரைகள் வழங்குகின்றார். இல்லையெனில், நாம் சிரேஷ்டமானவர் களாக, தூய்மை யானவர்களாக எவ்வாறு ஆக முடியும்? இந்த சமயத்தில் நேர்மையின்மை அதிகரித்து விட்டது. ஆகையால், நன்னடத்தை சபை (கமிட்டி) போன்றவை உருவாகின்றன. இதற்கு முன் இந்த அனைத்து விசயங்களும் கிடையாது. இந்த நேர்மையின்மை போன்ற அனைத்தும் இப்பொழுது தான் உருவாகியுள்ளன. மந்திரி போன்ற பதவியை அடைந்துவிட்டனர் என்றால், எவ்வளவு பணத்தைக் கொள்ளையடிக்கின்றனர். எவ்வளவு கீழான செயல்களைச் செய்கின்றனர்! சத்யுகத்தில் சிரேஷ்டமான அரசாட்சி இருக்கும். நீங்கள் மிகவும் சிரேஷ்ட மானவர்கள் ஆகிக் கொண்டிருக்கிறீர்கள். அங்கே பாவம் என்ற பெயரே கிடையாது. தந்தை வந்து

சொர்க்கத்திற்குத் தகுதி யானவர்களாக ஆக்குகின்றார். அழுக்கானவர்களாக இருக்கும் அனைவரையும் மலர்கள் ஆக்குகின்றார். சொர்க்கத்தைப் படைத்துவிட்டு, அனைவருக்கும் சத்கதியைக் கொடுத்துவிட்ட பிறகு நான் மறைந்துவிடுகின்றேன். எனது நடிப்பே அனை வருக்கும் சத்கதியை அளிப்பது தான். நான் முழு உலகையும் என்ன நிலையிலிருந்து என்னவாக ஆக்குகின்றேன்! மனிதர்களும் யுத்தம் தோன்றும் என்று கூறுகின்றனர். 5 ஆண்டு களுக்குள் இது நடக்கும், அது நடக்கும் என்று செய்தித்தாட்களில் வெளிவருகின்றன. நல்லது, வினாசம் ஏற்படும், பிறகு, நன்மை என்ன ஏற்படும்? இந்த வினாசம் கூட ஏன் ஏற்படுகிறது? காரணத்தைக் கூறுங்களேன். தந்தை சொர்க்கத்தை ஸ்தாபனை செய்து கொண்டு இருக்கின்றார் எனில், நரகம் அவசியம் வினாசம் ஆகும் என்பதை நீங்கள் இப்பொழுது அறிந்திருக்கிறீர்கள். தந்தை வந்து பழைய உலகை புதிய உலகமாக ஆக்குகின்றார். அங்கே அகால மரணம் ஏற்படுவதில்லை. ஒருபொழுதும் மரணத்தைப் பற்றிய பயம் இருக்காது, ஆத்மா என்ற ஞானம் இருக்கும். நாம் ஒரு சரீரத்தை விட்டுவிட்டு மற்றொன்றை எடுக்கிறோம். யார் தாமதமாக வருவார்களோ, அவர்கள் அவசியம் குறைவான பிறவிகளே எடுப்பார்கள் என்பதையும் புரிந்திருக்கிறீர்கள். நமது 84 பிறவிகள் முடிந்துவிட்டன. இதை உலகம் அறியவில்லை. ஆத்மாக்களாகிய உங்களுக்கு பரமபிதா பரமாத்மா புரிய வைக்கின்றார். பிரஜாபிதாவின் குழந்தைகள், தங்களுக்குள் சகோதரன், சகோதரி ஆவீர்கள். எனவே, எந்தவொரு விகர்மமும் செய்ய இயலாது. இந்தியா, சீனா சகோதர, சகோதரர் என்று கூறுகின்றனர், பிறகு, விகாரத்தில் எவ்வாறு செல்வார்கள்? சொல்வதோ எளிது, ஆனால், அர்த்தத்தை புரிந்து கொள்ளவில்லை. சகோதரன், சகோதரன் என்பது ஆத்மாவைக் குறிப்பதாகும். சகோதரன், சகோதரி என்ற சம்பந்தத் தில் விகாரப் பார்வை இருக்க முடியாது. லௌகீக சம்பந்தத்தில் கூட நெருங்கிய உறவினரோடு ஒருவேளை திருமணம் செய்கின்றனர் என்றால் கலகம் ஏற்படுகிறது.

நீங்கள் அனைவரும் தேவி தேவதைகளாக, சிரேஷ்டமானவர்களாக இருந்தீர்கள். பின்னர், தாழ்ந்த நிலையை அடைந்துவிட்டீர்கள். இப்பொழுது சிரேஷ்டமானவர்கள் ஆகிக் கொண்டிருக் கிறீர்கள் என்று தந்தை புரிய வைக்கின்றார். நாமே சிரேஷ்டமானவர்கள், 16 கலைகள் உடையவர்களாக இருந்தோம். பின்னர், 14 கலையில் வந்து, பிறகு, பிரஷ்டாச்சாரி (தாழ்ந்த நிலை) ஆகி ஆகி, இப்பொழுது மேலும் தமோபிரதான பிரஷ்டாச்சாரிகளாக ஆகிவிட்டோம். இந்தச் சக்கரத்தின் சித்திரத்தில் கூட தெளிவாக எழுதப்பட்டுள்ளது. குலத்தின் உருவமும் (விராட ரூபம்) உருவாக்குகின்றனர். ஆனால், அதில் உச்சிக்குடுமி பிராமணர்களைப் பற்றி கூறுவதில்லை. சிவபாபாவையும், பிராமணர்களையும் காண்பிக்கவில்லை. மற்றபடி தேவதை, சத்திரியர், வைஷ்யர், சூத்திரதைக் காண்பிக்கின்றனர். நாம் குட்டிக்கரண விளையாட்டு விளையாடுகிறோம் என்பதை இப்பொழுது நீங்கள் அறிந்து கொண்டீர்கள். இப்பொழுது நாம் பிராமணரிலிருந்து பிறகு, தேவி தேவதை ஆகப் போகிறோம். ஆகையால், தெய்வீக குணங்களை தாரணை செய்ய வேண்டும். இப்பொழுது வீடு திரும்பிச் செல்ல வேண்டும். பின்னர், நமக்காக முழு உலகமும் சொர்க்கம் ஆகிவிடும். நிலத்திற்கு தண்ணீர் கிடைத்துவிடும். இவ்வாறு இரவில் நல்ல முறையில் விசார் சாகர் மந்தன் செய்யுங்கள். அப்பொழுது பகலில் மிகுந்த உதவி கிடைக்கும். யாருக்காக நாம் வீதி வீதியாக

அலைந்து ஏமாற்றத்தை அடைந்தோமோ, அந்த இனிய தந்தையிடம் இப்பொழுது நாம் செல்கிறோம். எங்கேயும் வழி கிடைக்கவில்லை. இப்போது நீங்கள் ஆஸ்தியை அடைவதற்காக முயற்சி செய்து கொண்டு இருக்கிறீர்கள். ஆனால் மாயை கூட மிகவும் பலம் வாய்ந்தது. மிகவும் ஏமாற்றுகிறது. திடீரென காதை, மூக்கை பிடித்துவிடுகிறது. பிரஷ்டாச்சாரி ஆகிவிடுகின்றனர். காமத்தின் போதை வந்துவிடு கிறது. நாயகன், நாயகி போல் ஒருவடைய பெயர், உருவத்தின் பின்னால் கவரப்பட்டு விடுகின்றனர். மிகவும் ஏமாற்றம் அடைகின்றனர். பேராசைக்காரர்கள் முற்றிலும் பெயரை அவப்பெயர் ஆக்கிவிடுகின்றனர். இது அனைத்தும் நடந்து கொண்டே இருக்கிறது. குழந்தை களே, நினைவில் இருக்க வேண்டும் என்று தந்தை புரிய வைக்கின்றார். யார் நல்ல யோகியாக இருப்பார்களோ, அவர்கள் 4,5 தினங்கள் உணவு உண்ணாவிட்டாலும் கூட அதை பொருட்படுத்த மாட்டார்கள். மிகுந்த குஷியில் இருப்பார்கள். அத்தகைய நிலை இருக்க வேண்டும். எனக்குள் எந்த பொருள் மீதும் பேராசை இல்லைதானே! என்று தன்னைப் பார்க்க வேண்டும். நான் முழுத் தேர்ச்சிபெற்றுக் காட்டுவேன் என்று இலட்சியம் வைக்க வேண்டும். கல்ப கல்பத்தின் பந்தயம் ஆகும். நான் இலட்சுமி, நாராயணரை மணம் முடிப்பதற்கு மற்றும் இராஜ்யத்தைப் பெறு வதற்குத் தகுதியானவர் ஆகி இருக்கின்றேனா? என்று தன்னை சோதனை செய்ய வேண்டும். ஒருவேளை, ஏதாவது குறைகள் இருக்கின்றன என்றால் அவற்றை நீக்க வேண்டும், குறைகள் மறைந்து இருக்க இயலாது. இப்பொழுது சிவபாபாவுடன் உங்களுடைய தொடர்பு உள்ளது. சிலரை உயர்நிலை அடையச் செய்வதற்காக திருஷ்டி கொடுப்பார். தந்தை மிகுந்த உதவி செய்கின்றார். பிரம்மாகுமாரிகள், இதை நான் செய்தேன் என்று கூறுகின்றனர். நான் இவ்வாறு நன்றாக முரளி சொன்னேன் - இந்த அகங்காரம், நிலையை கீழே விழவைத்துவிடுகிறது. யார் நல்ல நல்ல குழந்தைகளோ, அவர்கள், பாபாவின் உதவி கிடைக்கிறது என்று புரிந்திருக்கி ன்றனர். சிலருக்குள் மாயை பிரவேசம் ஆகிவிடுவதால் கீழே விழுந்துவிடுகின்றனர். இதில், முழுமையாக ஆத்ம அபிமானி ஆகவேண்டும். தேகத்தின் பக்கம் திருஷ்டி செல்லக்கூடாது. தன்னை மாற்றிக் கொண்டே செல்லுங்கள் என்று பாபா அறிவுரை வழங்கிக் கொண்டே இருக்கின்றார். மாயையிடம் ஏமாற்றம் அடையாதீர்கள், இல்லையெனில், பதவியை இழந்துவிடு வீர்கள். அந்தப் பதியை நீங்கள் எவ்வளவு நினைவு செய்கிறீர்கள்! மேலும், இந்த பதிகளுக் கெல்லாம் பதியானவர், யார் உங்களுக்கு அமிர்தம் அளிக்கின்றாரோ, உங்களை சோழியிலிருந்து வைரம் ஆக்குகின்றாரோ, அவரை நினைவு செய்வதில்லை. அப்பேற்பட்ட தந்தையை எவ்வளவு நினைவு செய்ய வேண்டும்! ஸ்ரீமத் அனுசாரம் முயற்சி செய்யப்படுகிறது. ஏதாவது விசயம் வந்ததென்றால், பாபா, எனக்குள் என்ன அவகுணம் உள்ளது? என்று கேட்க வேண்டும். தேக உணர்வைத் துண்டிக்க வேண்டும். யார் முழுமையாகப் பலி ஆகிறார்களோ, அவர்களுக்கு 21 பிறவிகளுக்கான ஆஸ்தி கிடைக்கிறது. முழுமையாக பலி ஆகுவது என்றால் அவரிடம் புத்தி இருத்தல் வேண்டும். இந்த குழந்தைகள் முதலிய என்னவெல்லாம் இருக்கின்றனவோ, அவற்றிலிருந்து கூட புத்தி விலகிவிட வேண்டும். அதற்குப் பதிலாக உங்களுக்கு அங்கே அனைத்தும் புதியதாகக் கிடைக்கும் என்று பாபா கூறுகின்றார். பகவானின் கிருபையினால் குழந்தை கிடைத்தது என்று கூறுகின்றனர். அந்தக் கிருபையானது அல்ப காலத்திற்கானது என்று இப்பொழுது சுயம் பகவான் கூறுகின்றார். இப்பொழுதோ உங்கள் மீது மிகுந்த கிருபை காட்டுவார். உங்களை சோழியிலிருந்து வைரம் போல்

ஆக்கிவிடுவார். இல்லறத்தில் இருந்தாலும், இவை அனைத்தும் தந்தையினுடையது எனப் புரிந்து கொள்ளுங்கள். ஒவ்வொரு அடியிலும் அறிவுரைகளைப் பெற்றுக் கொண்டே இருங்கள். தந்தை தான் அறிவுரை வழங்குவார். எந்த தலைகீழான செயலையும் செய்ய விடமாட்டார். விகாரிக்கு கொடுக்க விட மாட்டார். அழிவற்ற சர்ஜனிடம் (அறுவைசிகிச்சை நிபுணர்) எதையும் மறைக்கக் கூடாது. ஒவ்வொரு அடியிலும் கேட்க வேண்டும். அனேகக் குழந்தைகள், பாபா, இந்த விகாரம் தொல்லை செய்கிறது என்று கேட்கவும் செய்கின்றனர், எழுதவும் செய்கின்றனர். சிலரோ முகத்தைக் கருப்பாக்கிக் கொண்ட பின்பும் கூறுவதில்லை. மறைத்துக் கொண்டே இருந்தார்கள் என்றால் மேலும் கருப்பாகிக் கொண்டே இருப்பார்கள். நல்லது.

இனிமையிலும் இனிமையான தேடிக் கண்டெடுக்கப்பட்ட செல்லமான குழந்தைகளுக்கு தாய், தந்தை பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் காலை வணக்கம். ஆன்மிகக் குழந்தைகளுக்கு, ஆன்மிகத் தந்தையின் நமஸ்காரம்.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1. முழுமையாக தேர்ச்சி பெறுவதற்காக என்னவெல்லாம் குறைகள் உள்ளனவோ, விகாரங்களின் அம்சம் உள்ளதோ, அவற்றை சமாப்தி (முடித்து) செய்து விட வேண்டும். எந்த விசயத்தினுடைய அகங்காரமும் இருக்கக்கூடாது.

2. திருஷ்டியை மிகவும் தூய்மையானதாக, சுத்தமானதாக ஆக்க வேண்டும். ஒருபொழுதும் எந்த தேகதாரியின் பின்னால் மாட்டிக் கொள்ளக் கூடாது, முழுமையாக ஆத்ம அபிமானியாக வேண்டும்.

வரதானம்: அமைதி சக்தியின் மூலம் கெட்டதையும் நல்லதாக மாற்றக் கூடிய சுப பாவணை நிறைந்தவர் ஆகுக.

விஞ்ஞான சாதனத்தின் மூலம் கெட்ட பொருளையும் நல்லதாக மாற்றி விடுகின்றனர். அதே போன்று நீங்கள் அமைதி சக்தியின் மூலம் கெட்ட விசயம் அல்லது கெட்ட சம்பந்தத்தை நல்லதாக மாற்றி விடுங்கள். அந்த அளவிற்கு சுப பாவனை நிறைந்தவர்களாக ஆகிவிடுங்கள். உங்களது சிரேஷ்ட சங்கல்பத்தின் மூலம் மற்ற ஆத்மாக்களும் கெட்டதை மாற்றி நல்லதை தாரணை செய்து விட வேண்டும். ஞானம் நிறைந்தவர் என்ற நோக்கில் சரியானது-தவறானதை அறிந்து கொள்வது தனிப்பட்டது. ஆனால் கெட்டதை கெட்டது என்ற ரூபத்தில் தனக்குள் தாரணை செய்வது தவறாகும். ஆகையால் கெட்டதை பார்த்தாலும், அறிந்திருந் தாலும் நல்லதாக மாற்றி விடுங்கள்.

சுலோகன்: சகிப்புத்தன்மை என்ற குணத்தை தாரணை செய்யும் போது கடுமையான சன்ஸ்காரமும் குளிர்ந்ததாக ஆகிவிடும்.